
## 2025 - புத்தகக் காட்சியில் கவனம் பெற்ற ‘கயிறு’!




2025-சென்னை புத்தகக் காட்சியை முன்னிட்டு, ‘சீர் வாசகர் வட்டம்’ சார்பில், ‘கயிறு’ என்கிற சிறு நூல், வாசகர்களுக்கு ஒரு ரூபாய் விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

சமகாலத்தில், பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் இடையே நிலவும் சாதியப் பாகுபாடுகளைக் களைவதற்கான வேலையை எங்கிருந்து தொடங்க வேண்டும் என்று பேசும் இந்த சிறு நூல், எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் எழுதி, ஏற்கனவே பாரதி புத்தகாலயம் வெளியிட்டது.

‘நீண்ட காலமாக இது எனது பழக்கம்’ என்று நாம் சொல்லும் அனைத்துமே என்றோ ஒருநாள் ஆரம்பித்ததுதான். நீண்ட காலமாகப் பின்பற்றப்படுவதால் மட்டுமே அந்தப் பழக்கம், சரியானது என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. எதைச் செய்தாலும், அதற்கான காரணத்தைத் தெரிந்துகொள்வது அவசியம் என்று இளம் பருவத்தினரைக் கேள்வி கேட்க தூண்டியது அந்த நூல்.

உதாரணமாக, சிலர் தங்கள் வீட்டு வாசலில் மஞ்சள் பூசுவது நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கும் பழக்கம். இது எதற்காக என்றால், மஞ்சள் ஒரு கிருமிநாசினியாகச் செயல்படும். அது ஒருவகையில், வீட்டினருக்கு ஆரோக்கியம் தருகிறது. ஆனால், இப்போது பல வீடுகளின் வாசல் நிலைகளில் மஞ்சள் கலரில் பெயிண்ட் அடித்திருக்கிறார்கள். அதனால், மஞ்சள் பூசும் பழக்கத்தின் பலன் கிடைக்கவே போவதில்லை. எனவேதான் எந்தப் பழக்கம் என்றாலும் ஏன்... எதற்கு என்று கேட்டுப் பழக வேண்டும் என இந்தக் கதையில் செழியன் என்கிற சிறுவன் வழி உணர்த்தி இருப்பார் எழுத்தாளர். பள்ளிக்கூட மாணவர்கள், கையில் கயிறு கட்டும் பழக்கத்துக்கு எதிராக, பள்ளி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திய இந்த நூல், சென்னை புத்தகக் காட்சியில் சீர் வாசகர் வட்டத்தின் வழி மேலும் பரவலாகச் செல்கிறது.

## :ப்ளாஷ்பேக்





எம்.கருணாநிதி

### பழம் கொடுத்து, வாழ்த்திய பேராசிரியர்!

2005-ஆம் ஆண்டு, ஜூன் 7-ஆம் தேதி, எனக்கு 25-ஆம் ஆண்டு திருமண நாள். அன்று நானும், என் குடும்பத்தினரும் கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களைச் சந்தித்து, வாழ்த்துப் பெற்றோம். அப்போது பிள்ளைகளின் படிப்பைக் கேட்டறிந்த அவர், நன்றாகப் படிக்க வேண்டும் என்று கூறி, அவர்களிடம் உரையாடியதுடன், அவர்களது கரங்களில் பழம் கொடுத்தும் வாழ்த்தினார். அன்று எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படம் எனது குடும்பத்தின் பெருமையான அடையாளமாக இருக்கிறது.

**– எம்.கருணாநிதி,**
**செய்தித்தாள் விற்பனையாளர் சங்கத் தலைவர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பெயர் மாற்றத் தீர்மானம்!

1943-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி ‘நீதிக்கட்சி’யின் நிர்வாகக் குழுவைக் கூட்டிய பெரியார் 4 தீர்மானங்களை நிறைவேற்றினார். ‘திராவிட நாட்டை (தென் தமிழ்நாடு) கவர்னர் ஜெனரல் தலைமையிலான மத்திய அரசாங்கத்திற்கு சம்பந்தமில்லாமல், பிரிட்டிஷ் மன்னரின் நேரடிக் கட்டுப்பாட்டில் தனி ஆட்சியாக வைத்திருக்க வேண்டும்’ என்பது ஒரு தீர்மானம். தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை ‘திராவிடர் கழகம்’ எனப் பெயர் மாற்றுவது மற்றொரு தீர்மானம். அடுத்த ஆண்டிலேயே நீதிக்கட்சி திராவிடர் கழகமானது.

# சீரணி ⟹ இளைஞர் அணி

43

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

ஓவியம் : ரவி பேலட்



# போரும் போராட்டமும்!

*பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசு சாரா, கழகம் சாரா அமைப்பு ஒன்றை ‘சீரணி’ என்ற பெயரில் ஏற்படுத்தி, இளைஞர்களை சமூகப் பணி நோக்கி வரவழைத்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசு சார்ந்து, ஆனால், கழகம் சாராத திட்டம் ஒன்றை ‘இளைஞர் அணி’ என்ற பெயரில் ஏற்படுத்தி, இளைஞர்களின் திறன்களை வளர்த்ததோடு, சமூகத்துக்கு அவர்களின் திறன்களைப் பயன்பட வைத்தார்.*

*1967-ஆம் ஆண்டு முதல் 1975- ஆம் ஆண்டு வரை மேற்கண்ட அமைப்பும் திட்டமும் தமிழ்ச் சமூகத்துக்கு ஆற்றிய தொண்டும் ஏராளம். நாட்டில் நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவை முடக்கப்பட்டன. அதனால், அடுத்த சில ஆண்டுகளுக்கு இளைஞர்களைச் சமூகத்துக்காக ஒன்று திரட்டும் முயற்சி சுணங்கிப் போயிருந்தது.*

*இந்நிலையில், 1980 ஜூலை 20 அன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் அணி என்ற பெருமைக்குரிய ‘இளைஞர் அணி’, இன்றைய கழகத் தலைவர், ‘திராவிட நாயகர்’ முதல்வர் ஸ்டாலின் அவர்களால் உருவாக்கப்பட்டது. இது அரசு சாரா, ஆனால், கழகம் சார்ந்த இளைஞர் அமைப்பு... கழகத்தின் வழியே சமூகத்துக்குப் பணியாற்ற இளைஞர்களைக் கவர்ந்த உழைப்பு..!*

*இன்றைய நம் தலைவர், அன்றைக்குத் தளபதியாக இருந்தார். 1980 ஜூன் முதல் 1982 ஆகஸ்ட் வரை அவரது தலைமையில் தமிழ்நாடு முழுக்க இளைஞர் அணி கட்டியெழுப்பப்பட்டு வந்தது. அந்த இளைஞர் அணி இரண்டு ஆண்டுகளில் எந்த அளவுக்கு ஆர்வத்தோடு பணியாற்றுகின்ற அணியாக உருவானது என்பதை அறிய, 1982 ஆகஸ்ட் மாதம், இளைஞர் அணியின் இரண்டாம் ஆண்டு விழா திருச்சியில் நடைபெற்றது.*

*அந்த விழாவில், கலைஞர் அவர்கள் பேசும்போது, ‘கராத்தே கற்றுத் தருவோம்’ என்று கூறி இளைஞர் அணியை நாங்கள் அமைக்கவில்லை. சிலம்பாட்டம் பயிற்றுவிப்போம் என்று கூறி, இளைஞர் அணியை நாங்கள் நடத்தவில்லை’ என்று குறிப்பிட்டார்.*

*அன்றைக்கு மட்டுமல்ல... இன்றைக்கும் ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவாத அமைப்புகள் மேற்கண்டவற்றைச் சொல்லித்தான் தங்கள் அமைப்புக்கு ஆள் சேர்க்கின்றனர். இதைச் சுட்டிக்காட்டும் விதமாகத்தான் கலைஞர் பேசினார் என்பது கவனிக்கத் தக்கது.*

**‘முரசொலி’ நாளேட்டில் எழுதிய ‘தமிழ் இனம் மெல்ல மெல்ல அழிவதா’ என்ற கடிதத்தை இலட்சக்கணக்கில் அச்சிட்டு, நாடெங்கும் விநியோகிக்க வேண்டும்’ என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

*அந்த விழாவில்தான் ஐந்து பேர் கொண்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்புக் குழு அறிவிக்கப்பட்டது. பின்னர் கூடுதலாக இருவர் சேர்க்கப்பட்டு, ஏழு பேர் கொண்ட குழுவாக அது மாறியது. அந்தக் குழு, முதன் முதலாக அன்றைய வட ஆற்காடு (இன்றைய வேலூர்) மாவட்டத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. அந்தச் சுற்றுப்பயணத்தில் இரண்டு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*அந்தக் காலகட்டத்தில்தான் இலங்கையில் தமிழர் மீதான தாக்குதல்கள் நடைபெறத் தொடங்கியிருந்தன. அதைக் கண்டிக்கும் விதமாக ‘இலங்கையிலே தமிழ் ஈழம் காண போராடிய வீரர்கள் குட்டிமணியும், ஜெகனும், இலங்கை அரசால் தூக்குத் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களையும் சிறையில் வாழும் மற்றும் 75 வீரர்களையும் விடுதலை செய்யக்கோரி தி.மு.க. ஆகஸ்டு 28 ஆம் தேதி, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு நாளாக கடைப்பிடிக்க உள்ளது. இந்தப் பாதுகாப்பு நாளில் கழக இளைஞர் அணியினர் கருப்புச் சின்னம் அணிந்து கூட்டத்தில் பெருமளவில் கலந்துகொள்வது எனவும், இது பற்றித் தலைவர் கலைஞர் அவர்கள் 20.08.1982 அன்று ‘முரசொலி’ நாளேட்டில் எழுதிய ‘தமிழ் இனம் மெல்ல மெல்ல அழிவதா’ என்ற கடிதத்தை இலட்சக்கணக்கில் அச்சிட்டு, நாடெங்கும் விநியோகிக்க வேண்டும்’ என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்ததாக, இந்தி மொழித் திணிப்புக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியது.*

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

43

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”**

***அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் விவேகானந்தர் பாறைக்குமிடையே கண்ணாடிப் பாலம் அமைக்கும் திட்டம் அ.தி.மு.க. அரசினுடையது என்கிறாரே, எடப்பாடி பழனிசாமி?***



# கண்ணாடிப் பாலம் சாதனை! கதறும் பழனிசாமி!

*‘ஸ்டிக்கர் பாய்ஸ்’ என்று பெயர்பெற்ற அ.தி.மு.க., பிறரின் இனிஷியலைத் தனக்குப் போட்டுக்கொள்வதில் ஒரு போதும் வெட்கப்பட்டதில்லை. தி.மு.க.வின் சாதனைகளை உரிமை கொண்டாடுவதே அ.தி.மு.க.வின் வழக்கமாக இருக்கும். காவிரி நடுவர் மன்றம் அமைத்தது தொடங்கி, ‘கோயம்பேடு பேருந்து முனையம்’, ‘சென்னை மெட்ரோ ரயில் திட்டம்’, ‘மதுரை மாட்டுத்தாவணிப் பேருந்து நிலையம்’ உள்பட பலவற்றிலும் தன் தலைவர்களின் பெயர்களை வெட்கமேயின்றி, அ.தி.மு.க ஆட்சி சூட்டிக் கொண்டது. முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் அமைந்துள்ள ‘அய்யன் திருவள்ளுவர் சிலை’, கால் நூற்றாண்டைக் கடந்து இன்று உலகோர் வியக்கும் தமிழ்நாட்டின் கலைப்படைப்பாக உள்ளது. 133 அடி உயர வள்ளுவர் சிலையைக் கடல் மீதான பாறை மீது நிறுவியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தச் சிலையை வடித்தவர் கலைஞரின் நெஞ்சுக்கு நெருக்கமான சிற்பி கணபதி ஸ்தபதி.*

**வள்ளுவருக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில், கடல் நடுவே கண்ணாடிப்பாலம் என்ற சாதனையைப் படைத்துள்ளார். அதைப் பொறுக்க முடியாத காந்தாரியாகக் கதறுகிறார் ‘ஸ்டிக்கர்’ பழனிசாமி.**


*சிலைக்குப் புகழ் கிடைத்ததும், எம்.ஜி.ஆர் தலைமையிலான அ.தி.மு.க ஆட்சியில்தான் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்று குறுக்கும் நெடுக்குமாக அ.தி.மு.க.வினர் ஓட ஆரம்பித்தனர். பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாயைக் கொண்டு 1979-இல் அடிக்கல் நாட்டுவிழா கல் நடப்பட்டாலும், அடுத்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் சிலைக்கான ஒரு கல் கூட செதுக்கப்படவில்லை. 1975-இல் கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை என அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றிய கலைஞர்தான், 13 ஆண்டுகாலம் கழித்து ஆட்சிப் பொறுப்பேற்றபின், 1990-இல் திருவள்ளுவர் சிலைப் பணிகளைத் தொடங்கி வைத்தார். அதையாவது பின்னர் வந்த ஜெயலலிதா அரசு தொடர்ந்ததா? 1991-96 அ.தி.மு.க. ஆட்சியில் எந்தப் பணியும் நடக்கவில்லை. பின்னர், 1997ல் கலைஞர்தான் மீண்டும் முதலமைச்சராகப் பணிகளை வேகப்படுத்தி, 1-1-2000 அன்று உலகம் வியக்கும் சிலையைத் திறந்துவைத்தார்.*

*2001-2006, 2011-16, 2016-21 என வள்ளுவர் சிலை நிறுவிய பிறகு மூன்று முறை அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போதும், வள்ளுவர் சிலை பராமரிப்புக்கான ‘ரசாயனப் பூச்சு’ கூட முறையாக செய்யப்படவில்லை. தி.மு.க. ஆட்சி மீண்டும் வரும்போதுதான் வள்ளுவர் சிலை பராமரிக்கப்பட்டது. இந்த இலட்சணத்தில் கண்ணாடிப் பாலம் அமைக்கக் கனவு கண்டதாகவும், கொரோனா வந்ததால், கிடப்பில் போட்டதாகவும் கதையளக்கிறார், பழனிசாமி. கொரோனா முதல் அலை முடிந்த பிறகாவது முதல்கட்ட வேலையைத் தொடங்கியிருக்கலாமே? கோமாவிலா இருந்தது அ.தி.மு.க அரசு? கலைஞரின் வழியில் இன்றைய முதலமைச்சர் வள்ளுவருக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில், கடல் நடுவே கண்ணாடிப்பாலம் என்ற சாதனையைப் படைத்துள்ளார். அதைப் பொறுக்க முடியாத காந்தாரியாகக் கதறுகிறார் ‘ஸ்டிக்கர்’ பழனிசாமி.* **...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

709

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.